## 7.8 ஊராட்சி தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர் பதவியிடங்களில் ஏற்படும் காலியிடங்கள் பற்றிய அறிக்கையை இரண்டு தினங்களுக்குள் மாவட்ட தேர்தல் அலுவலரிடம் தெரிவித்தல்

---

ஊரக வளர்ச்சி (சி4) துறை

அரசாணை (நிலை) எண் 66 நாள் : 14.3.2000

படிக்க :

1. ஊரக வளர்ச்சி இயக்குநர் கடித எண் 84651/98பிசிஅ4, நாள் 5.10.98.
2. செயலர், தமிழ்நாடு தேர்வாணையம் கடித எண். 6631/பிஇ2, நாள் 3.9.99.

**ஆணை**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ன் கீழ் ஊராட்சி மன்றங்களில் உள்ள தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பனர் பதவியிடங்களில் ஏற்படும் காலியிடங்களை பற்றி அறிவிப்பது தொடர்பாக வரைவு விதிகளை ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு அனுப்பி வைத்தார். செயலர் தேர்தல் ஆணையம் தனது அறிக்கையில் தமிழ்நாடு ஊராட்சிகள்(தேர்தல்) சட்டம் 1994 விதி 5ல் துணை வதி 4 காலியாகும் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர் பதவியிடங்களை தெரிவிப்பது பற்றி கூறுகிறது. தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்) சட்டம் 1995, பிரிவு 84,85,88 மற்றும் 201ன் உட்பிரிவு (டி) ஆகிய பிரிவுகளில் வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி மாவட்ட தேர்தல் அலுவலர், ஊராட்சிகள் ஆய்வாளர் என்ற முறையில் ஊராட்சிகளில் உள்ள காலியிடங்கள் பற்றிய அறிக்கையைப் பெற அதிகாரம் உள்ளவர் ஆவார். மேலும் ஊராட்சிகளிலுள்ள காலியிடங்களை பற்றிய அறிக்கையை ஊராட்சித் தலைவர், தலைமை செயல் அலுவலர் மற்றும் பொறுப்பானவர்கள் ஆகியோரிடமிருந்து இரண்டு தினங்களுக்குள் பெறும் வகையில் சம்பந்தப்பட்ட ஊராட்சி அமைப்புகளுக்கு அறிவுரைகள் வழங்குமாறு மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தமிழ்நாடு மாநில தேர்தல் செயலர் தெரிவித்துள்ளார். எனவே இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு செயல்முறை அறிவுரைகள் வழங்கினால் போதுமானது என்று அரசு கருதுமானால் அரசு அவ்வாறே செய்யலாம் என்று மாநில தேர்தல் ஆணை செயலர் தெரிவித்துள்ளார்.

2. அரசு இதனை நன்கு ஆய்வு செய்து. தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தின் செயலர் அவர்களின் பரிந்துரையை ஏற்று , ஊராட்சி மன்றத்தில் தலைவர், துணைத் தலைவர் மற்றம் உறுப்பினர் பதவியிடங்களில் ஏற்படும் காலியிடங்கள் பற்றிய அறிக்கையினை தலைவரோ/செயல் அலுவலர், துணைத் தலைவரோ அல்லது உறுப்பினரோ (தேவைக்கேற்ப) காலியிடம் ஏற்பட்ட நாளிலிருந்து இரண்டு நாட்களுக்குள் மாவட்ட தேர்தல் அலுவலரிடம் தெரிவிக்க வேண்டும் என அறிவுறுடத்தப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்